திரு. வ. மு. சுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு புயல் வெள்ளம் வந்தபோது மழை பெருக்கெடுத்து அந்த ஊர் வெள்ளத்தால் சூழப்பட்டு 10 நாள் பட்டினி கிடந்தார்கள், தொடர்பு இல்லாததால். புரட்சித் தலைவர் அவர்கள் உத்தரவின் பேரிலே, ஹெலிகாப்டர் மூலமாக உணவுப் பொட்டலம் வழங்கப்பட்டது. அதன் பிறகு புரட்சித் தலைவர் அவர்களே, ஹெலிகாப்டரில் வந்து ஊர் ஊராகப் பார்த்தார்கள். அந்த அவல நிலை எல்லாம் எதிர்காலத்தில் ஏற்படாத அளவுக்கு அவர்கள் அதைத் தீர்த்து வைப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருக்கின்ற பிரச்சினைகளை எடுத்துக் சொன்னார்கள். நான் ஏற்கனவே தெரிவித்தைப் போல, இந்த ஆண்டு நிதி ஆதாரத்திலே இதற்கு என்று ஒதுக்கவில்லை என்பதைத் தெரிவித்தேன். ஆகவே, உரிய நடவடிக்கைகள் எடுத்து உடனடியாக அந்தப் பகுதிக்கு அதிகாரிகளை அனுப்பி, நிலைமைகளை ஆராய்ந்து நான் ஏற்கனவே சொன்னது போல் வருகின்ற நிதி ஆண்டிலே, அதைப்பற்றி இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 94, திரு. காஞ்சி பன்னீர்செல்வம் மற்றும் திரு. எஸ். ஆசைமணி, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

94—

பர்கூர் தொகுதியில் மாதிரிக் குடியிருப்பு அமைத்தல்

*3967 திரு. காஞ்சி பன்னீர் செல்வம்:

திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) பர்கூர் தொகுதியில் மாதிரிக் குடியிருப்பு அமைக்கப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதுபோன்று மற்ற பகுதிகளுக்கும் விரிவாக்கப்படுமா?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அமைக்கப்பட உள்ளது. 21-8-91 அன்று தர்மபுரி மாவட்டம் பர்கூர் தொகுதியில், சாதி, சமய வேறுபாடற்ற கிராமிய மாதிரி குடியிருப்புத் திட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அவர்களால்தான் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே இதுபோன்ற மாதிரி குடியிருபபுத் திட்டத்திற்கான கருத்தினை வழங்கியவர் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள்தான் (மேசையை தட்டும் ஒலி) எனவே இந்த மாதிரி குடியிருப்பு திட்டத்திற்கு ''புரட்சித்தலைவி ஜெயலலிதா நகர்'' என்ற பெயரிடப்பட்டுள்ளது. (மேசையை தட்டும் ஒலி).

(ஆ) பர்கூரில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டபின், அரசின் நிதி நிலைக்கு ஏற்ப, தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களினும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவாகளே, செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் என்னுடைய தொகுதி உத்திரமேரூர் தொகுதி இருக்கிறது. அந்தத் தொகுதியிலே அடுத்த ஆண்டிலாவது இதய தெய்வம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுடைய அனுமதியோடு என்னுடைய தொகுதிக்கு அவருடைய திருப்பெயரால் இப்படிப்பட்ட மாதிரி குடியிருப்பு அமைப்பதற்கு ஆவன செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லா ஊர்களிலும் ஆரம்பிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களோடு கலந்து ஆலோசித்து இதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய பெயரைக் கொண்டு அமைக்கப்படவுள்ள இந்த நகரம் அமைக்கப்பட்ட அந்த நோக்கத்தையும், இந்தகுடியிருப்புகளுடைய சிறப்பு அம்சங்களையும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வரும் சமுதாயத்தில் குடியிருப்பு ஒரு முக்கிய தேவையாகும். சமதர்ம சமுதாயம் 21 ஆம்

நூற்றாண்டை நோக்கி விரைந்து முன்னேறும் சூழ்நிலையில் எல்லா மதத்தவரும், இனத்தவரும் இணைந்து வாழ வழி வகுப்பது இந்தத் திட்டம்.

வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள மக்களுக்கு சாதி, மத இன வேறுபாடு இன்றி வீட்டு வசதி அளிப்பதே இந்த புதிய அரசின் நோக்கமாகும். ஒரே குடியிருப்பு வளாகத்திற்குள் அனைத்து அடிப்படை வசதிகளும் உள்ளடக்கிய மாதிரிக் குடியிருப்பு வளாகம் அமைப்பதே இதன் குறிக்கோளாகும். புதுமைச் சமுதாய மறு மலர்ச்சிக்கு இத்திட்டம் வழிவகுக்கும்.

இந்த நகரில் இந்து இஸ்லாமியர் மற்றும் கிருத்துவர்களுக்காக தனித்தனியாக 3 வழிபாட்டுத் தலங்கள் அமைக்கப்படும்.

இந்தத் திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்:

வீடுகள் 300; சமுதாயக் கூடம்-1; விளையாட்டு மைதானம் 1; தொடக்கப்பள்ளி-1; அங்காடி-1; பூங்கா-1; தாய் சேய் நல நிலையம்-1; நூலகம்-1 வழிபாட்டு இடங்கள்-3; சாலைகள்-3 கிலோ மீட்டர்; மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி1; தெரு விளக்குகள்-150; மொத்த மதிப்பீடு இந்த திட்டத்திற்காக 3 கோடி ரூபாய்.

இந்த புரட்சிமிகு குடியிருப்புத் திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) வெள்ளோட்ட முறையில் தர்மபுரி மாவட்டத்தில் செயல் படுத்தப்பட உள்ளது. இத்திட்டம் முழுமை அடைந்த பிறகு, அரசின் நிதி நிலைக்கு ஏற்ப மாநிலத்தின் மற்ற பகுதிகளில் விரிவுபடுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி கோ. மல்லிகா.

செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜாதி, மதம், இனம் ஆகிய எல்லா வரையறைகளையும் கடந்து மக்கள் தொண்டே என் உயிர் மூச்சு என சூளுரைத்து பாடுபட்டு வரும் நமது இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் பெயரால் ஒவ்வொரு ஊரிலும் இதய தெய்வத்தின் பெயரால் கோவில்கள் நிர்மாணிப்பது போல் இத்தகைய குடியிருப்புகளை ஏற்படுத்த முனைகிறபோது, புவன கிரி தொகுதியிலும் ஒரு மாதிரி குடியிருப்பை ஏற்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா மாவட்டங்களிலும், எல்லா இடங் களிலும் நிதி ஆதாரத்தை முன்னிட்டு இது விஸ்தரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1991 செப்டம்பர் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம் மாள். கேள்வியை மட்டும் கேளுங்கள்,

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே இது பாராட்டுவதற்குரிய ஒன்றாகும். இந்த 300 வீடுகள், 400 வீடுகள் என்று கட்டுவதிலே மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். ஒரு வீட்டுக்கு எவ்வளவு எஸ்ட்டிமேட்? இதிலே அரிசன சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு பேர் இணைக்கப்பட்டிருக்கிறார்கள்? அது எத்தனை சதவீதம் இணைக்கபபட்டிருக்கிறார்கள் என்பதை சொல்ல முடியுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு வீட்டிற்கும் எத்தனை ரூபாய் என்பதைப்பற்றி அரசின் மூலமாக ஆய்வு செய்யப்பட்டு வருகின்றது. குறிப்பாக பல்வேறு வீடு கட்டுகின்ற திட்டங்களில் ஆதி திராவிட சமுதாயத்தினர்தான், ஊருக்கு ஒதுக்குப்புறமாக ஒதுக்கிவைக்கிற நிலைமையிலே இருந்துநீக்குவதற்கு தமிழகத்தைப் பொறுத்த அளவிலே ஆட்சி செய்திருக்கிற பல்வேறு முதலமைச்சர்கள் எல்லாம் முயன்று பார்த்து, தோல்வி கண்ட நிலையிலே இந்தத் திட்டம் ஆதிதிராவிட சமுதாயத்தினரை, ஒற்றுமையாக எல்லா மத, இன மக்களோடும் சேர்ந்து வாழ வேண்டுமென்ற உயர்ந்த லட்சியத்தை கொண்டிருக்கிற எங்களுடைய இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய எண்ணத்திற்கேற்ப (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஆதி திரரவிட சமுதாயத்தினர் எல்லாம் ஒரே சமுதாயமாக வளர வேண்டுமென்ற அடிப்படையிலேதான் இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 95. திரு. க. அர்ச்சுனன். மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

95—

சேலம் மாவட்ட நெடுங்குளம் இராசிபுரம் குடிநீர்த் திட்டம்

*3971 திரு. க. அர்ச்சுனன்:

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் மாவட்ட நெடுங்குளம்-இராசிபுரம் குடிநீர்த் திட்டம் நிறைவேற்ற முனைப்பு காட்டப்படாததற்குக் காரணம் என்ன?

(ஆ) இதற்காக இந்த நிதியாண்டில் ஒதுக்கியுள்ள நிதி எவ்வளவு?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS